## தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம் - 2014

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, கூட்டினைக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கக் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்த நிறுவக அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை நியமங்களுக்கேற்பத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அனுசரணையாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிரயாம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வடமத்திய மாகாண சபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிசார் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 01 இன் பிரகாரம் சொத்துக்கள் / மூலதன மாற்றம் தொடர்பான கூற்று கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்படவில்லை

(ஆ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்று குறித்த மாதிரிப் படிவத்திற்கேற்பத் தயாரிக்கப்படவில்லை.

(இ) நியம இலக்கம 01 இன் 45 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் அனைத்து பொருண்மையான சமமான விடய தொகுதியும் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் கல்விசார் நிகழ்ச்சித்திட்ட வருமானமாகிய ரூபா 30,326,318 பிற வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கற்கை நெறிக் கட்டணம் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை உருவாக்கப்பட்டு வெளிக்கொணரப்படவில்லை.

(ஆ) திறைசேரியால் வருடாந்தம் மூலதனச் செலவின நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தும் அந்நிதியேற்பாட்டைக் கணக்கிலிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்குரிய தெளிவான கணக்கீட்டுக் கொள்கை உருவாக்கப்பட்டு வெளிக் கொணரப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீண்டுவரும் செலவினத்திற்குத் திறைசேரியால் மீளாய்வாண்டின்போது ரூபா 80,855,000 வழங்கப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 80,899,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மூலதனச் செலவினமாகிய ரூபா 150,509 மீண்டுவரும் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பரில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 244,080 பணிக்கொடையாக வழங்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகையைப் பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டுக் கணக்கில் வரவு வைக்காது பணிக்கொடைச் செலவினக் கணக்கில் வரவு வைத்தமையால் மீளாய்வாண்டினது நிதிச் செயலாற்றல் கூற்றில் பணிக்கொடைச் செலவினம் ரூபா 244,080 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்கெனத் தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு காசேட்டில் வரவு வைக்கப்படாதிருந்த பல்வேறு கற்கை நெறிகள் மற்றும் மாணவர்களிடமிருந்து அறவிடப்படும் பிற கட்டணங்கள் ஆகிய ரூபா 1,264,281 வருமானமாகக் கணக்கிலிடப்படாதிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிசார் செயலாற்றல் கூற்றில் இடர்க்கடன் மாற்றமாக ரூபா 6,592,425 சொத்தாகவும் ரூபா 6,362,523 பொறுப்பாகவும் காட்டப்பட்டிருந்ததுடன் வித்தியாசத் தொகையான ரூபா 230,102 க்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2014 ஆம் ஆண்டின்போது பல்வேறு கற்கை நெறிகளுக்கும் அறவிடப்பட்ட கட்டணத்தில் நிறுவக உத்தியோகத்தர்களுக்கென வார இறுதியில் நடாத்தப்படும் விரிவுரைகளுக்காக ரூபா 4,048,400 கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2009 மே 29 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அதற்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்குகளில் காட்டப்பட்டிருந்த போலிச் சொத்துக்களான ரூபா 694,118 மீளாய்வாண்டில் புத்தகங்களில் பதிவழிக்கப்பட்டிருந்தது. அச் சொத்துப் பதிவழிப்பிற்கான பணிப்பாளர் சபை மற்றும் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் (4) | வாகன விபத்துக்கள் 06 தொடர்பாக ஆரம்ப அறிக்கைகளோ அல்லது இறுதி அறிக்கைகளோ தயாரிக்கப்பட்டுக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 110 | நட்டங்கள், இழப்புகள் தொடர்பான பதிவேடு பேணப்படவில்லை. |
| (ஆ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | |
| (i) | 1992 ஜனவரி 25 ஆந் திகதிய 3/92 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியினது (i) மற்றும்(ii) ஆம் பிரிவுகள் | நிறுவன உத்தியோகத்தர்கள் 17 பேருக்குச் சுற்றறிக்கைக்கு முரணாக கடமைக்கு வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றில் நேரச் சலுகை வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | 1999 பெப்ரவரி 26 ஆந் திகதிய 02/99 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சுற்றறிக்கைப் பிரகாரம், உரித்தற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 37,750 பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்படவில்லை. |
| (ஈ) | 2009 மே 26 ஆந் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | சுற்றறிக்கைக்கு முரணாக 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய 121/08/2013 ஆம் இலக்கக் கட்டுப்பாட்டுச் சபைத் தீர்மானத்திற்கு அமைய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டில் மாதாந்தம் ரூபா 30,000 வீதப்படி 4 மாதங்களுக்கு ரூபா 120,000 வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 907,191 பற்றாக்குறையானதுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,806,700 ஆகவுமிருந்தது. இதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 6,899,509 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் மீண்டுவருஞ் செலவினத்திற்கான மானியத்தில் ஏற்பட்ட ரூபா 15,838,000 அதிகரிப்பு அரசாங்கத்தின் மூலதன மீண்டுவரும் மானியத்தில் ஏற்பட்ட ரூபா 3,615,866 அதிகரிப்பு ஏனைய பெறுவனவுகளில் ஏற்பட்ட ரூபா 34,138,402 அதிகரிப்பு என்பன இதற்கான பிரதான காரணங்களாகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கை பல்வேறு பிரிவுகளாலும் மாதாந்தம் தயாரிக்கப்பட்டவை

ஆகும். நிறுவகத்தின் ஒட்டுமொத்த பௌதிக மற்றும் நிதிசார் நிலையைக் காட்டும் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படவில்லை.

(ஆ) அனுராதபுரம் மற்றும் தலாவ பயிற்சி நிலையங்களிலும் களணி மாணாக்கர் விடுதியிலும் மீளாய்வாண்டின்போது அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகள் செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

**(இ) சமூக சேவைகள் வித்தியாலயம்**

(i) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 5 பட்டப் படிப்புக் கற்கை நெறிகளுடன் தொடர்புடைய பரீட்சை மன்றக் கூட்டங்கள் நடைபெறாமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2014 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சமூக வேலைகள் டிப்ளோமா கற்கை நெறிகளை சமூக சேவைகள் வித்தியாலயத்தினூடாக அனுராதபுரம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருந்த போதும், அக்கற்கை நெறிகள் 2014 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்படவில்லை.

**(ஈ) பயிற்சிப் பிரிவு**

(i) பயிற்சிப் பிரிவால் விரிவுரை தொடர்பான டிப்ளோமாக கற்கை நெறிகள் இரண்டிற்குரிய பரீட்சை மன்றங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பயிற்சிப் பிரிவால் 11 குறுகிய காலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தி 630 நபர்களைப் பயிற்றுவிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், 442 பேரே குறுகியகாலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திட்டங்களில் கலந்து கொண்டமையால் இது இலக்கிடப்பட்ட எண்ணிக்கையில் 70 சதவீதம் ஆகும் என அவதானிக்கப்பட்டது.

(iii) 2014 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கை திட்டத்தில் இலக்கிடப்பட்ட பின்வரும் கற்கை நெறிகளும் பணிகளும் இடம்பெறவில்லை.

- சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான மன அழுத்த முகாமைத்துவமும் மனோ வித்தியா விரிவுரையும் தொடர்பான குறுகிய காலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- கெஸ்பாவ பிரதேச செயலகப் பதவியணியினருக்கான குறுகியகாலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.
- நிறுவகத்தின் கல்விசார் / கல்விசாரா பதவியணியினருக்கான இயலளவு அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- கண்டியில் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்தல்

(உ) சமூக அபிவிருத்திக் கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பிரிவு

2014 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கமைய நிறைவேற்ற வேண்டிய 12 பணிகளில் 9 பணிகள் மாத்திரமே அவ்வாண்டில் நிறைவேறியிருந்தன. நிறைவேற்றுவதற்கு எண்ணிய 3 பணிகள் நிறைவேறாததுடன் இப்பிரிவுக்குப் உரித்தற்ற 3 பணிகள் நிறைவேற்றப்பட்டுமிருந்தன.

**4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விபத்துக்குட்பட்டிருந்த மூன்று வாகனங்கள் தொடர்பில் ஏற்பட்டிருந்த ரூபா 86,450 நட்டம் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்படவில்லை.

(ஆ) திறைசேரியால் சுழற்சிக் கடன் நிதியம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக 1998 ஆம் ஆண்டில் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 02 மில்லியன் மூலம் கடன் நிதியத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படாது அத்தொகையையே கடனாக வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**4.3 நிதிக் கட்டுப்பாட்டிலான நலிவுகள்**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையே ரூபா 9,000 மற்றும் ரூபா 6,000 என்பவற்றிற்கான 2 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் காசேட்டில் பதிவு செய்யப்படாது கணக்கீட்டு உத்தியோகத்தரது வாய்மூல அறிவுறுத்தலுக்கமைய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகம் இயங்கும் நாராஹேன்பிட கட்டிட உரிமையாளருக்கு பெறுமதி சேர் வரியாக ரூபா 918,000 வழங்கப்பட்டிருந்தபோதும், உரிமையாளரின் பெறுமதிசேர் வரிக்கான பதிவு உறுதி செய்யப்படவில்லை.

(இ) நிறுவக நலன்புரி சங்கத்திற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 35,287 வழங்கப்பட்டிருந்தது.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாய்ணடின் போது இலங்கை சமூக வேலைகள் தொழில் சார்ந்தவர்களது சங்கத்தின் 47 ஆம் வருடாந்த மற்றும் தொழில்நுட்பச செயலமர்வு என்பவற்றிற்கு நிறுவகத்தால் ரூபா 150,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

தனியார் துறைப் பாதுகாப்புச் சேவை உரிமையாளர் நிறுவக வாகனம் ஒன்றில் வளாகத்தில் பயணஞ் செய்யும்போது வாகனம் விபத்துக்குள்ளாகி ரூபா 153,166 இழப்பிற்குள்ளாகியிருந்தது. அதில் ரூபா 111,276 காப்புறுதிக் கம்பனியிடமிருந்து கிடைக்கப்பெற்று எஞ்சிய ரூபா 41,890 குறித்த நபரிடமிருந்து அறவிடப்படாது வாகனப் பழுதுபார்த்தல் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது.

**4.6 பதவியணி நிர்வாகம்**

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தில் கல்விசார் பதவியணியில் 22 சதவீத வெற்றிடங்களும் கல்விசாராப் பதவியணியில் 10 சதவீத வெற்றிடங்களும் நிலவின. கல்விசார் பதவியிணியில் ஒருவர் வெளிநாடு சென்றிருந்தார். கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரப்படி கல்விசாராப் பதவியணியிக்கு அமைய அடிப்படையில் 8 பேர் மீளாய்வாண்டின்போது சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) நிறுவகத்தின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் கடமைகள் ஒப்படைக்கப்பட்டிராததுடன், மூன்று ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் பெண் ஆராய்ச்சி உதவியாளர்களும் ஆராய்ச்சிப் பிரிவிற்கு புறம்பாக முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்குரிய கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 4.7 பிற அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிறுவக வளங்கள்

2003 ஜுன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் 8.3.9 பிரிவுக்கு முரணாக நிறுவகத்தின் பெண் உத்தியோகத்தர் ஒருவர் சமூக சேவைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டின்போது சம்பளம், பயணச் செலவினம், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக ரூபா 367,628 அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களித்தகைமையும் நல்லாளுகையும்

### 5.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

(அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் வரவு, செலவுத் திட்டமாக வரைவு வருமான செலவினக் கூற்றும் ஐந்தொகையும் சமர்ப்பிக்கப்படவேண்டுமாயினும், அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி வருமானக்கூற்று தயாரிக்கப்படாததுடன் வரைவு நிதி நிலைமை விபரமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது நிறுவகம் கற்கை நெறிகளை நடாத்துவதன் மூலம் ரூபா 31,271,645 அறவீடு செய்திருந்தது. எனினும், 2014 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தில் கற்கை நெறிகளை நடாத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் வருமானம் உள்ளடக்கப்படாதிருந்தது. மேலும், திறைசேரி நிதியேற்பாட்டிற்குப் புறம்பாக நிறுவகம் தனது சம்பாத்தியத்தையும் செலவிற்குப் பயன்படுத்தியபோதும், அதற்குரிய விபரம் வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாததால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு
(இ) வருமானக் கட்டுப்பாடு